ானசம்பந்தம

லர் 10.] விக்ருதிஞூ கார்த்திகைமீ 10—12—50. [இதழ் 1.

திருவளர்தாமரையை ஆனந்தக்கூத்தர் திருவடியில் திருவாதவூராளி சாத்துகிருர்.

ஆசிரியர் : ாகலிங்கத் தம்பிரான்.
தவி ஆசிரியர் : சு. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆ

தருமபுர ஆதினத்தைச் சார்ந்த திருக்கடவூரில்

திருக்கடவூரில் கார்த்திகைச் சோமவாரங்கள் நான்கும் சங்க பிடேகச் சிறப்புடன் நடைபெறுகிறது. முதற்சோமவாரத்தில் தருமபு ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபால தேசிகர் அவர்கள் "திருக்குறளும் சைவமும்" என்பதுபற்றியும் கல்லூரி கௌரவப் பேராசிரியர் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தர தம்பிரான் சுவாமிகளவர்கள் "சிவமும் செந்தமிழும்" என்பதுபற்றியும 2-ம் சோமவாரத்தில் தருமபுர ஆதீன வித்துவான், திரு. வை. மு சண்முகதேசிகர் அவர்கள் "கடவூருறை உத்தமன்" என்பதுபற்றியும் 3-ம் சோமவாரத்தில் கரந்தைத் தமிழ்விரிவுரையாளர், திரு. அடிக ளாசிரியர் அவர்கள் "நாவுக்கரசர் பத்தித்திறன்" என்பதுபற்றியும் ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான். திரு. V. S குருசாமி அவர்கள் "அன்னை அருள்" என்பதுபற்றியும் சொற் பொழிவுகள் நிகழ்த்தினர்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களு அவ்வப்போது எழுந்தருளி இறைவழிபாடு செய்தருளினர்கள்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினத்தில்

இவ்வாதீனத்தின் சார்பாக 12—11—50 ல் திருக்குறள் வகுப்பு மாணவர் கழகத்தின் சிறப்புக்கூட்டம் திரு. M. S. கோவிந்தன் B. A., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கழக மாணவர்களும் திரு. சா. கணேசன் அவர்களும் விரிவுரையாற்றினர்கள். புதுவை புலவர்மணி திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தமது "ஆதீன வித்துவானாக" அங்கீகாரம் செய்துகொண்டு பொற்பதக்கமும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

24—11—50 ல கலெக்டர் திரு. A. உத்தண்டராம பிள்ளை அவர்கள் தலைமையில் ஆதீன ஐந்துகோயில் தேவஸ்தான நூல்நிலையத் திறப்புவிழா நடைபெற்றது. தருமையாதீன வித்துவான், பாலகவி, திரு. வே. இராமநாதஞ் செட்டியார் அவர்கள் வரவேற்புரைகூற, திரு. சா. கணேசன் அவர்கள் நிலையத் திறப்பினை நிகழ்த்தி, ஆதீனப் பணிகளைப் பாராட்டிப் பேசினர்கள்.

29—11—50 ல் ஆதீனத்தைச் சேர்ந்த சதுர்வேதிமங்கலம் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 10] விக்ருதி௵ கார்த்திகை௴ 10—12—50. [இதழ் 1

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

பத்தாம் ஆண்டு பிறந்தது.

ஞானசம்பந்தத்திற்குப் புதிய ஆண்டு பிறக்கிறது. பத்தாவது வயது தொடங்குகிறது இந்தப் பத்து ஆண்டுகளாகக் கலவியாளர்களுடைய கைவளத்தால் கண்வளமும்பெற்று நடந்துவருகிறது. இந்த மாதத் தாளின் குறிக்கோள் சைவத்தையும் தமிழையும் பரப்புதலேயாம். சைவமும தமிழும உயிருக் உடலும போல்வன. உடல் தமிழ்; உயிர் சைவம். தோத்திரநூல் செய்த திருஞானசமபந்தர் முதலாகிய சைவசமய பரமாசாரியர்களும், சாத்திரநூல்கள் செய்த மெய்கண்டார் முதலாகிய சந்தானாசாரியர்களும் தமிழின் வழியாகவே சமயத்தைப் பரப்பினார்கள். அத்தெய்வத்தமிழ் விளக்கத்தினாலேயே தென்னாடு சிவம்பெருககும் நன்னாடாகத் திகழ்கின்றது. அவர்கள் மெய்ஞ்ஞான வளர்ச்சியை நாட்டுககு நல்கியவர்கள். மெய்ஞ்ஞானத்தால் மககளிடையே

அமைதியும் ஆநந்தமும் நிலவின. மலைபோன்ற துன்பங்கள் வந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாதுவென்றார்கள். சிறு தளர்ச்சி வந்தபோது 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்' என்ற ஞானவீரம் உள்நின்று ஊக்கம் அளித்து வந்தது. இவ்வளவும நிகழ்ந்தது ஒரு நூற்றாண்டுக்கு முந்தியகாலம்வரை.

இந்த நூற்றாண்டில் மக்களுடைய சமுதாய வாழ்வு சீர்குலைந்து, 'அகிலமெல்லாம் கட்டி ஆளுகினும் கடல்மீது ஆணைசெலவே நினைவர்' என்ற ஆணைமொழிககு இலக்காகி, எல்லாமககளும் தன்னலம் டாமபீகம் போட்டி பொறாமை முதலிய பேய்க்குணங்களுக்கு அடிமைப்பட்டார்கள். இவைகளால் பொருளாசை மிகுந்தது. பொருளாசைககாகப் புதிய புதிய வழிகளைத் தம்முடைய புத்தியின் துணைகொண்டு கண்டுபிடிக்கத தொடங்கினார்கள். அதனால் விஞ்ஞானம் வளர்வதாயிற்று. விஞ்ஞான வளர்ச்சி மெய்ஞ்ஞானத்தின் வாயிலை அடைவிககும் ஒருவழியாகும் என்பதை மக்கள் மறந்து, அழிவு வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கினார்கள். அதனால் தெய்வத்தமிழ்நாட்டின் பாரம்பர்யமான சமய ஒழுக்கங்களும தத்துவ சாஸ்திர ஞானமும் படிப்படியாகக குறையத் தொடங்கின. நாள் ஒன்றுககு ஆள் ஒன்றுககுச் சராசரி மூன்றரை ரூபாய் வருமானமுள்ள நாடுகளும், பஞ்சமே தெரியாத பணத்திலே புரண்டு கொண்டிருக்கின்ற நாடுகளுங்கூட அமைதிககு வழிதெரியாது தவிககின்ற நாளிலே கிடைத்த சராசரி வருமானம இரண்டணாவைக்கொண்டு சிவனே என்று சௌக்கியமாக வாழ்ந்தநாடு இன்றைக்கு பசி பசி, பஞ்சம் பஞ்சம், பற்றாது பற்றாது, என்று தவிக்கக காரணம் என்ன?

பலகாளைகள் பலஏர்கள் உழுத இடத்திலே ஒரு ட்ராக்டர் உழுகிறது. கட்டுக்காப்பு இல்லாமல்ஓடியகாவிரி

போன்ற நதிகளில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீண் போகாதவாறு பாதுகாக்கப்படுகிறது. எத்தனையோ விதமான ரசாயனக் கலப்புரங்கள் பயன் படுத்தப்படு கின்றன. அன்றைய நிலைமையைக காட்டிலும் மக்கள் கண்ணும் கருத்துமாக விளைச்சலைப் பாதுகாககிறார்கள். அப்படி இருந்தும விளையுள் சுருங்குகிறதேயன்றி விரிவடையவில்லை. பொருளாதார நிபுணர்கள் ஜனப் பெருககம காரணம் எனறு கூறுவார்கள். ஜனத் தொகைபெருகியதற்கு ஒப்ப, காடுமேடுகளும் விளைபுலன் களாக ஆகியிருககின்றன. ஆனாலும் விளைச்சல் போத வில்லை. மக்களோ மனித உரிமையையும் இழந்து ஒருவரை ஒருவர் நம்பாமல் வாழ்கிறார்கள். இவ்வள வுகரும் காரணம் என்ன? மக்களுக்குச சமய உணர்ச்சி குறைந்தது ஒன்றுதான். இந்தநிலையில் சமய உணர்ச் சியைப் பரப்ப, பத்தாண்டுகட்கு முன் எழுந்தது இந்தத் திங்கள் இதழ்; பரப்பிவருகிறது.

பல தமிழநூல்கள் அவ்வப்போது இதில வெளி வருகின்றன. அவை இனியும் தொடர்ந்து வெளிவரும். இத்தகைய திங்களதாளுககு மேலும வளர்ச்சிக்குத் தகக ஊட்டமளிகக எஙகள ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசநிதானம் அவர்கள காததுக கொண்டிருககிறார்கள். இடைககு இடை 'ஞானசமபந்தம பததாயிரம காப்பி வெளிவர வேண்டும; பருககவேண்டு'; படஙகள் மூலமாகவும எலலாருடைய கண்ணையும் கவரவேண்டும்; நாம் செய்யும் பணிகளை அடிககடி வெளியிட்டு அதனால் பலரும் பணி வகைககளை அறிந்து பயன்படுத்திககொள்ள வழிவகுக்க வேண்டும்' என்று திருவாய்மலர்ந்து ஊக்கிவருகிறார்கள். ஆகையால் சில புதிய அமைப்புககளுடன் இத்திங்கள் தாள் அண்மையில அழகாக வெளிவர இருக்கிறது. ஆதலால் அன்பர்கள்வழககம்போல ஆதரிப்பார்களாக.

சேக்கிழாரின் சொல்லழகு

[தென்னாப்பிரிகா - டர்பன், திரு. சு. மு. பிள்ளை]

சேக்கிழார் செய்யுள்நடை மிகச் செம்பாகமானது. கடினமான சொற்கள் வாரா. போக்கும் ஆற்றொழுக்கிலே - பாட்டுப் போகும் போக்கிலே வைத்து வசன வாக்கியம் போலே பொருள் செய்யும்படி இருக்கும். பொருள் செய்யும்போது பாட்டின் ஒரு இடத்துள்ள சொற்களை வேறிடத்துக் கொண்டுசேர்த்துப் பொருள் செய்யவேண்டிய அவசியம் சேக்கிழார் கவிகளில் காண்பது மிக அரிது. சரித்திரத்தைத் தொடர்ச்சியாய்க் கதை சொல்வது போலே பாட்டுக்களாலே அழகாகச் சொல்லிக்கொண்டு போவதில் சேக்கிழார் கைதேர்ந்தவர். அவர் பாட்டுக்களை மோனை எதுகை அடி தொடை ஆகிய பாட்டு அமைப்பை நீக்கி வரிசையாய்த் தொடர்ந்தெழுதுவோமானால் வசனமாகவே ஆகிவிடும்.

ஆனாத சீர்த்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
வானாறு புடைபரக்கு மலர்ச்சடையார் அடிவணங்கி
ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொளநினைந்து
தேனாரு மலர்ச்சோலைத் திருத்தில்லை மருங்கணைந்தார்.

ஆனந்த வெள்ளத்தி னிடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் தமைக்கண்டு
எனத்தங்கியதிலதாம்! என்னஅதிசயம்! என்றார்.”

இந்தப் பாட்டுக்களை அடி தொடை யின்றித் தொடர்ந்து எழுதினாலே செம்பாகமான வசன வாக்கியமாய்ப் பொருள் எளிதில் விளங்குவது காணலாம்.

வளம் பொழில்சூழ் வைப்பூர்க்கோன் தாமன் எந்தை!
மருமகனை மாறிவனை! அவற்கு மகளிர் நல்ல
இளம் பிடியா ரோரெழுவர் இவரின் மூத்தாள்
இவனுக்கென் றுரைசெய்தே ஏதிலானுக்கு

உளம் பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த பின்னும்
ஓர் ஒருவராரு, என மொழிய ஈந்தான்;
தளர்ந் தொழிபும் இவனுக்காகத் தகவுசெய்து அங்கு
அவனை மறந்து இவனையேசார்ந்து போந்தேன்.

என்பனவாதி வரலாறு திருமருகலிலே வணிகப் பெண் தமது சரிதத்தைச் சொல்லும் முறைகளில், வசனபாகமாக வருவது காணத்தக்கது

சுந்தரமூர்த்தி நாயனுர் கொங்கு நாட்டிலே திரு அவிநாசித்தலத்தின் பிராமணர் தெரு வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது எதிரெதிராக உள்ள இரண்டு வீடுகளிலே ஒரே காலத்தில ஒன்றில் மங்கல வாத்திய ஒலியும மற்ருென்றில அழுகை ஒலியும கேட்டன. அதன காரணம என்ன என்று அங்கு நின்ற பிராமணர்களைக் கேட்டார். அதற்கு அவர்கள் ஐந்து வயதுள்ள இரண்டு பிராமணச்சிறுவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் இவ்வூர் மடுவில் குளிக்கச் சென றனர். ஒரு சிறுவனை முதலை விழுங்கிவிட்டது. தப்பி வந்த சிறுவனுக்குப் பூணுநூல் அணிகின்ற கலியாணம் இந்த மனையில நிகழுகின்றது. சிறுவனை இழந்தார் தம மைந்தனை நினைந்து அழுகை நிகழ்வது அந்த வீடு என்று சொன்னுர்கள. சுந்தரமூர்த்திகள் அது கேட்டுச் சிவபெருமானைப்பாடி இரங்கி அச் சிறுவனை முதலைவாயிலிருந்து தருவித்துக் கொடுத் தருளினுர். இச்சரிதப்போக்கை அவ்வாறே விளக்க மிகச்சுருக்கமாக அழகிய கதைப்போக்காகச் சேக்கிழார் சுவாமிகள் சொலலியருளுவது காண்க.

மறையோர்வாழும் அப்பதியின் மாடவீதி மருங்கணைவார்
நிறையுஞ் செல்வத்து எதிர்மனைகள் இரண்டின் - நிகழ்மங்கல இயங்கள்
அறையுமொலி யொன்றினில - ஒன்றில அழுகையொலி - வந்
தெழுதலும் அங்கு
உறையும் மறையோர்களை இரண்டும் உடனேநிகழ்வது என்?' என்றார்.

அந்தணாளர் வணங்கி "அரும புதல்வா இருவர் - ஐயாணடு
வந்த பிராயத்தினா - குளிததமடுவில் முதலே ஒரு மகவை
முந்த விழுஙகப் - பிழைததவனே முநநூல் அணியுங கலியாணம்
இந்தமனே - மற்று அந்த மனே இழநதாா அழுகை என்றுரைததார்."

இங்கே இருதிறத்தார் நேர்நின்று பேசுவதும கதை நிகழ்ச்சியும் தொடர்பான வாககியம் போலவே பொருட் பெருக்கமும் சொற்சுருக்கமும் செறிந்து செல்லும் இனிய நடை காணத்தக்கது.

மேலும் சுவாமிகளது செய்யுள் நடை மிகவும் கம்பீரமான பெருமிதம் உடையது: எளிய போககா னுலும உயர்ந்த நோககம கொண்டு படிப்போர் மனததை உயர்விலேயே கொண்டுபோய் வைப்பது.

சரிதம் சொலலிப்போகும் போக்கிலேயே 'ஆழ்க தீயது எல்லாம' என்றபடி தீமைகளும் நன்மைகள் அல்லாதவைகளும பயனற்றவைகளும சுருங்கி ஒதுங் கிப்போகும். 'அரன் நாமமே சூழக' என்றபடி அரன் பெருமைகளும நன்மை நிகழச்சிகளும் சரிதம சொல்லிப்போகும அழகிலேயே மிகப்பெருகிச் சிறந்து நமது உளளததே பதிநதுவிடும. சுவாமிகள் புராணம பாடிய நோககம் அதுவேயாம எனபது அவர் சரிதத தாற் கண்டோமல்லவா? திருஞானசம்பநத சுவாமிகள் அருளிய திருப்பாசுரத்திற்கு உட்கிடைப் பொருள் உரைககவந்த ஆசிரியர் சேககிழார் சுவாமிகள் முதற் பாசுரத்திற்கு,

ஆழ்க தீயதென றோதிற்று அயல்நெறி
வீழ்க எனறது; வேறுஎலலாம் அரன்பெயர்
சூழக எனறது, தொல்லுயிா யாவையும்
வாழி அஞ்செழுதது ஓதி வளாகவே"

என்று விதந்து எடுத்துககாட்டி அந்தப் பரம கருணாநிதியாகிய ஆசாரிய சுவாமிகளின் உலக முழுதும்

வியாபித்த பெருங் கருணையை விளக்கிப் போற்றினர். அதனையே பின்பற்றிய சுவாமிகள் தமது கருத்தும் அதுவேயாதலை இப்புராணச் சரிதங்கள் சொல்லிப் போகும் செய்யுட் போகிலேயே வைத்துக் காட்டினர். சரித நிகழ்ச்சியைப் படித்துக்கொண்டுபோகும்பொழுதே தீமைகளில் வெறுப்பும் நன்மைகளில் விருப்பும் தானகவே படிப்போர் மனதில் உண்டாகும். வல்லவன் நடிக்கும் ஒரு கூத்தையோ அல்லது ஒரு உண்மை நிகழ்ச்சியையோ ஒருவன் நேரிற்கண்டால் எவ்வாறு அந்தந்த இடங்களிலே தக்கபடி சினம் - நகை - ஆசை - அன்பு - இரக்கம் முதலிய மனவெழுச்சிகள் தாமாகவே காண்பவன் மனத்தில் எழுந்து நிகழுமோ, அது போலவே சேக்கிழார் சரிதம் படிக்கின்றோர்க்கும் நிகழும். இவற்றை அங்கங்கே யுத்தம் - வேட்டை - தலைவர் தலைவி பிரிந்து நிற்கும நிலை, கூடிய நிலை, அடியார்களைப் பகைத்தோர் செய்த வஞ்சக நிகழ்ச்சிகள் முதலிய வரலாறுகளைச் சொல்லும்போது அங்கங்கே அனுபவித்துக் காணலாம்.

சிலோன் அன்பர்களுக்கு :-

தெல்லிப்பழை திரு. பொ. கருணகரரிடத்தில் அன்பர்கள் கொடுத்த, சென்ற ஆண்டுச் சந்தாத் தொகையில் ஒரு காசுகூட இதுவரையில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும உள்ள சட்டதிட்டங்களின் கட்டுப்பாடுகாரணமாக, எமமிடம் வந்து சேரவில்லை என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேம். ஆதலின் தொடர்ந்து பெற விரும்புகின்ற சிலோன் அன்பர்கள் சென்ற ஆண்டுத் தொகையுடன் இந்த ஆண்டுத்தொகையையும சேர்த்து எமக்கு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

—செயலாளர்.

மெய்கண்டார் விஜயம்

[திரு. மு. ஞானப்பிரகாசம், B. A., B. SC. யாழ்ப்பாணம்.]

புலன்களுடன் கூடிநின்று புறப்பொருள்களை நாம் அறிந்தும் அனுபவித்தும் வருகின்றோம் என்றும், அவ்வாறான ஒரு நிலை எல்லாக்காலத்திலும் எல்லா மக்கட் கூட்டத்தினர்க்கும் சுபாவமானதே என்றும், அது புலன்களை ஆளாத - புலன்களால் ஆளப்படுகின்ற ஆசையே வடிவமான பாசஞானநிலை என்றும் முந்திய கட்டுரையில் கூறினோம். அந்த ஆசையே வடிவமான பரிதாபநிலையிலே பொதுஜனவாழ்வு நடைபெறுகிறது. அந்நிலையினராகிய நாம் ஆசைகளை நிறையவைத்துக் கொண்டு, சந்திகளில் நின்றுகொண்டும் தெருக்களில் சென்றுகொண்டும் "நாம் எல்லோரும் இந் நாட்டு மன்னர்" என்று கோஷம் செய்துகொண்டு திணறித் திரிவோமாயின் நம்நாடு அல்லோல கல்லோலப்படும் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்! பொது ஜனங்களாகிய நாமெல்லோரும் இந்நாட்டிற்கு மாத்திரமன்று; எந்நாட்டிற்கும் மன்னர் என்பது உண்மையே. அந்த உண்மை உண்மைஎனத்திகழ்வது, ஆசைப்பெருக்கைப் பெருக்கி வாழும் இந்தப்பொதுஜன நிலையில் அன்று. புலன்களை வென்று - மனத்தை வென்று - கடமையை உணர்ந்து வாழும் ஓர் விசேஷ நிலையிலேயே நாம் இந் நாட்டிற்கும் எந்நாட்டிற்கும் மன்னராய்த்திகழ்வோம். இப்பேருண்மையைப் பொதுஜனங்களாகிய நாம்தாம் உணராவிடினும், நமது அரசியல் தலைவர்களாயினும் உணர்ந்து ஒழுக்கநிலை நின்று, தத்தம் கடமைகளைத் திரிகரண சுத்தியோடும் ஆற்றிவருதல்வேண்டும்.

கடமையை உணர்ந்துவாழ்வது கடினம். அதுவும், கண்டு கேட்டு உண்டு உற்று உயிர்த்து வாழும் போக வாழ்விற்குரிய வசதிகளெல்லாம் பல்லாயிரக் கணக்காய்

பெருகியிருக்கும் இக்காலத்தில் கடமையை உணர்ந்து வாழ்வது மிகவும் கடினம். உரிமைப்போராட்டம் எனப்படும் ஓர் மாய இயக்கமும் அதற்கேற்ற மனோ பாவமும் பரவி வரும் இக்காலத்தில் மனிதன் தன்கடமையை உணர்ந்து ஆற்றி வாழ்வதுஎன்றால் அப்பப்ப மிகவும் கடினம், கடினம், கடினம்.

நமது நாடு, ஒரு காலத்தில் ஒழுக்க நெறிக்கும் கடமை உணர்ச்சிக்கும் பெயர்பெற்றது. இக்காலத்தில நமது நாடு இந்த இரண்டுமின்றித் தத்தளிக்கின்றது என்பது வெளிப்படை, காரணம்யாது? மேனாட்டிலிருந்து வந்த ஜனநாயக ஆட்சி முறையை நம்நாட்டு மக்கள் விளங்கா விளக்கமாய் விளங்கி வருகின்றனரோ, அல்லது அந்த ஆட்சி முறை நம்நாட்டு மக்களின் மனோ தர்மத்திற்கு அன்னிய மானதோ, அல்லது வேறு காரணமோ யாம் அறியோம். வரையறையான வாழ்க்கை முறையைப் பெரிய பெரிய இடங்களில் சிறிது சிறிதாகக் கைவிடத் தொடங்கிவிட்டனர். ஏனையோரும் வாழ்க்கை வரம்புகளை முறித்து வருகின்றனர். ஒழுக்கம் குன்றி விட்டது. கடமை உணர்ச்சி மறைந்து விட்டது. 'கோடின்றி வட்டாடிவரும்' ஒரு நவீன வாழ்வே இன்று எவ்விடத்திலும் தலைவிரித்து ஆடுகின்றது.

இந்நிலையில் நாம் செய்யவேண்டியது யாது? ஒழுக்கத்தையும் கடமையையும் வற்புறுத்துகின்ற தெய்வத் திருவள்ளுவரின் தமிழ்நாட்டுத் திருநெறியையே மக்கள் நன்கு உணரும்படி செய்தல் வேண்டும். ஒழுக்கநெறியோ, கடமை நெறியோ நமது நாட்டில் வேரூன்றினால் அன்றி, குடும்ப வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் நிலை கொள்ள மாட்டா. அவைகள் நிலைகொள்ளாத ஒரு சமூகத்தின் மத்தியில், அறிவு இச்சை செயல்களைச் சராசரப்படுத்தி, பண்படுத்தவல்ல - அயரா அன்பு நிலைக்குச் செலுத்தவல்ல - சைவசித்தாந்தச் செந்நெறியை விளக்க

மூயலுதல் வீண்செயலேயாகும். எனவே,ஒழுக்க நெறி யைப் பற்றி அறியவேண்டியது ஒவ்வொருவர்களும் மிக இன்றியமையாதது: அந்த ஒழுககநெறி பாச ஞான நிலையிலிருந்து பசுஞான நிலைக்கு நம்மைப் படிமுறையில் உயர்த்தவல்லது: அது புலனடககத்தைத் தருவது; ஆசை களைக கட்டுப்படுத்துவது; உணர்ச்சியைப் பண் படுத்துவது; அந்த ஒழுக்கநெறி மனத்தை ஒருவழிப் படுத்தும் கடிவாளம் போன்றது. நாம் விரும்பினுல், மன்னராம் நிலைக்கு - உண்ம அதிகார நிலைக்கு - உண்மையில் தூககிவைப்பது அதுவே. ஒழுககம விழுப்பம் தரலால, அது உயிரினும் ஓமபப்பெறவேண்டும் எனபது திருவள்ளுவர் ஆணை. நம நாட்டில எத்தனை தமிழ்மககள திருவள்ளுவரின் ஆணையைச் சிரமேற் கொள்ளுகிறுர்கள்? எனபது பெரிய கேள்வி. திருவள் ளுவர் திருநாள் ஆயிரக்கணககான இடஙகளில் தமிழக த்தில் வெகு விமரிசையாகக கொண்டாடப்பெறுகின்றது என்பது உண்மையே. ‘வள்ளுவனை ஈன்ற தமிழ நாடு’ என்று தமிழகத்திலுள்ள மூலை முடுககுகள் தோறும் கோஷம் செய்து வருகின்றுர்கள். என்பது உண்மையே. இவையெல்லாம் தற்காலத்திற்கு இயல்பாகவுள்ள வெறும் (Fashon) நாகரிகம என்றமுறையில நிகழ் வனவா? அல்லது திருவள்ளுவரின் திருவுள்ளத்தை நமது மக்கள்நீடீரென்று உணர்ந்திருப்பதனுல் எழுந்து வரும நிகழ்ச்சிகளா? சிந்தித்துப் பாருங்கள்.

நமது நாட்டில் திருவள்ளுவரின் ஒழுககநெறி, அவர் வாழ்ந்துவந்த 2-ம் 3-ம் நூற்றுண்டுககே தகுதி வாய்ந்தது என்றும் ஜனநாயக நெறி பரவிவரும் இககாலத்திற்கு எவ்வாற்றுனும் பொருந்தமாட்டாது என்றும் ஓர் தப்பபிப்பிராயம் படித்த மேதாவிகளிடத் தில் நிலவிவருவதாகத் தெரிகிறது. நம் முன்னோர் தந்த ஒழுக்கநெறி மூதன்முதலில் ஒருவர்கருத் தன்

கண் காது முதலிய புலன்களை ஆள்வதற்கு உரிய பயிற்சியைத் தருவது. தன்புலன்களை ஆள்பவனே தன் குடும்பத்தையும், தன் சமூகத்தையும் திறம்பட ஆளும் வலலபம் பெறுவன். இவ் வுண்மையேயன்றி, வேறோருண்மை இவ்வுலகத்தில் எத்தேசத்திலாவது, எககாலத்திலாவது இருந்ததாகத தெரியவில்லை. இப் பேர்ப்பட்ட அழிவிலலாத உணமைககும் காலத்திற்குக காலம முடியாட்சி என்றும குடியாட்சி என்றும் மாறி மாறிவரும் அரசியல்முறைக்கும ஒருவித சமபந்தமும் இல்லை. முடியாட்சி, குடியாட்சி என்பன எல்லாம வெளியுலகில் நிலவிவரும் வெறும் நாமபேதங்களே· உண்மையில் நாட்டின்செல்வமும் செழிப்பும், அந் நாட்டு மககள கொண்டுள்ள வரையறையான வாழ்ககையிலும ஒழுககநெறியிலும், கடமை உணர்ச்சியிலுமே தங்கி யிருககின்றன. ஒழுககத்தைப்பற்றிப் பேசுபவர்கள் பிற் போககானவர்கள் என்றும், சாதிசமயப்பூசல்களுககு வித்திடுபவர்கள் என்றும ஒரெண்ணம் நமதுநாட்டில பலமாகப் பரவிவருகின்றது. அதற்குஅஞ்சி இககாலத் தில எததனையோ சமயப்பிரசார நிலையங்களில ஒழுக் கததைப்பற்றிய பிரசாரத்தை மிகமிகக குறைத்து வருகின்றார்கள். அவ்வாறு குறைத்துவரின், கால கதியில் ஒழுககநெறியைத் தமிழகத்திலிருந்து நாடு கடத்திவிட்ட குற்றத்திற்கு ஆளாவோம என்பது திணணம் பாருங்கள்! 20-ம் நூற்றாண்டுஎன்பது பெரிய காலவெள்ளத்தில் ஒரு சிறிய குமிழிபோன்றது. இந்த நூறறாணடு மககளின் மனோபாவத்திற்கு அஞ்சி நமது பெருமைவாய்நதஒழுககநெறியை, நமது தமிழ்மககளின் உயிரை நாம் இழந்து நிற்பது முறையாகுமா?

தமிழகம் சிறந்து வளரவேண்டுமெனில், ஒழுக்கத் தைப்பற்றிய பிரசாரமே எங்கணும் முதன் முதலில் கிளம்புதல் வேண்டும. சமயப்பிரசார மேடைகளில் நல்வாழ்விற் கின்றியமையாத 'கொல்லாமை' 'கள்ளா

மை' 'கற்பு' 'இல்லறம்' 'குடும்ப வாழ்வு' 'புலனடக்கம்' போன்ற விஷயங்களே முககியமான இடம் பெறுதல் வேண்டும். நம முன்னோர்தந்த சைவசித்தாந்த செந்நெறிக்கு வாழகக்கைப்பட்ட யாம் மேற்படி விஷயங்களை உணர்ந்து உணர்ந்த ஏனையோர்கரும் உணர்த்திவரின், நாமும் சித்தசுத்தி பெறுவோம். ஏனையோரும் சித்தசுத்தி பெறுவர். எல்லோரும் சமய வாழ்விற்குரிய தகுதி பெற்றவராவோம்.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள்-உரைவளம்.

அறத்துப்பால்

நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர்கள் வரலாறு ஆராய்ச்சிககுறிபபுகள், சொல்லகராதி இவைகளும சேர்க்கப்பட்டுள்ளன.

கனம பக்தவத்ஸலம, டாக்டர். சண்முகஞ் செட்டியார், ரஸிகமணி டி. கே. சி, டாகடர். சிதமபரநாதச் செட்டியார் ஆகியோர்களின் மதிப்புரைகளும இணைககப்பெற்றுள்ளன.

உரைப்பகுதி, உரைவிளக்கப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, என்ற நான்கு பிரிவுகளில உரைவளம் அமைந்துள்ளது.

கிரவுன்சைஸ் 568 பக்கங்கள்

ரெக்சைன் பைண்டு விலை ரூ. 6—0—0

தபாற கூலி முதலியன ரூ 1—0—0

விலாசம:- K. பாலநாதன்
செயலாளர்,
ஞானசம்பந்தம பதிப்பகம்
தருமபுரம், மாயூரம் P. O

ஐந்தொழில்

[வித்துவான், திரு. க. சம்பந்தனார், கடலூர்]

உலகில் இப்பொழுது தொழில் வளர்ச்சி பற்றி எங்கும் பேச்சு உலவி வருகிறது. ஒரு நாட்டின் முன்னேற்றம் தொழிலபிவிருத்தியைப் பொறுத்திருக்கிறது என்று அறிஞர்களும் கூறுகின்றார்கள். இது உண்மை என்பதற்கு அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகள் சாட்சியாக இருக்கின்றன. ஆனால் பொதுவாகத் தொழில் என்பது எப்படி ஏற்பட்டது என்று பார்த்தால், உலக உயிர்களெல்லாம் உலகப் பொருள்களைத் தத்தம் அறிவுநிலைக்குத் தக்கவாறு உற்றுப்பார்க்கின்றன; அவ்வளவில் அவ்வுயிர்கட்கு இப்பொருள்களை அடையவேண்டும் என்ற விருப்பம் காரணமாக மனஎழுச்சி உண்டாகின்றது; அன்றியும், துறவுநிலையில் வெறுப்பு காரணமாகவும் மன எழுச்சி உண்டாகலாம். பெரும்பாலும் மனவெழுச்சி விருப்பு காரணமாகவே நிகழ்வதைக் காணலாம். அம்மனவெழுச்சியே தொழில் நிகழ்தற்குக் காரணமாயுள்ளது. மனவெழுச்சி உண்டானவுடன் கரணங்கள் (உடலுறுப்புகள், மனம், மொழி) தொழிற்படுகின்றன. அக்கரணங்களின் இயக்கமே தொழிலாக முடிவில் ஏற்படுகிறது.

இத்தொழில் நிகழ்ச்சி தனக்காகவும் தன்னலமற்ற நிலையிலும் ஏற்படுவதுண்டு. தனக்காக நிகழுமானால் அதற்குப் பெருமை இல்லை; அதனால் துன்பமே வரும்; இன்பம் சிறிதும் கிடையாது. தன்னலங்கருதியே செயலாற்றும் ஒவ்வொருவனும் முதலில் முன்னேற்றம் அடைவது போலக் காண்பித்து முடிவில் ஹிட்லர், முசோலினி போல் அழிவது நிச்சயம் என்பதை நாம் உணர்தல் வேண்டும். தியாக உணர்ச்சியுடன் இருப்பவன் தொழில்கள் யாவும் அமரத்துவம் வாய்ந்தனவாகவே

அறிவாளிகளால் வழிவழி போற்றப்படும் அன்றியும் அதன் கருத்தாவையும் மகாத்மாவாகவே கருதி மன்னுயிரெல்லாம தொழும். இந்நிலையில் தன்னலமற்றசேவை என்பது மனித இனத்திலதான் வெளிப்படையாகவும் சிறப்பு முறையிலும சிறந்து நிற்கும் ஆகவே உலகில் நிகழும தொழில்களெல்லாவறறிற்கும கடவுளபடைப்பும அதுபறறி உயிர்களிடதது கடவுள தூண்ட எழும் எண்ண அலைகளுமே காரணமாகின்றன என்பதை இதுவரை அறிநதோம.

இனி உலகப்படைப்பில் ஈடுபட்ட கடவுடகும மனவெழுச்சி ஏற்பட்டுத்தான் இருத்தல்வேண்டும. அவர் மனஎழுச்சிககுககாரணம் யாது? ஆம்நல்லகேள்விதான். ஆணவ இருளில் ஆழ்ந்துகிடககும் உயிர்க் கூட்டங்களைக காணுகிறார் கடவுள். உடனே கருணை உண்டாகிறது. அக்கருணையே காரணமாக உயிர்கட்கு வேண்டிய உடல், உலகம, இன்பப்பொருளகள முதலியவற்றைப் படைக கிறார்; அககருணை காரணமாகவே படைத்தவற்றைக் காககிறார்; காத்தவற்றை அழிககிறார்; அழித்து மறைக் கிறார்; பின் உயிர்கட்கு அருள செய்கிறார்

இவ்வைந்தொழிலையும வடமொழியாளர் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம, திரோபவம, அனுககிரகம என்று கூறுவர். இந்நிறத்தன, இவ்வணணத்தன், இவனிறைவன் என்றெழுதிக காட்டமுடியாத கடவுள் நமக்காக (ஆன்மாககளுககாக) பல்வேறு வடிவநதாஙகி இவ்வைந தொழிலையும புரிநதுவருகிறார். பிரம விஷ்ணு உருத்திரர் களைக் கொண்டு படைததுக காத்து அழிககிறார். அன்றியும், ஐந்தொழிலையும ஒருருவநதாஙகியும ஆற்றி வருகிறார். இனி அவ்வுருவததினையும அதனால் நடைபெறும ஐந்தொழிலையும ஆராய்ந்தறிவோம்.

ஐந்தொழிலாற்றும் அழகிய உருவம நடராஜர் உருவமாகும். நடராஜர் தென்திசைநோக்கி ஆடுகிறார்.

விரும்பி ஆடுகிறார். அதனாற்றான் போலும் அணுக் குண்டும், வகுப்புத்தொல்லையும், பூகம்பமும், எரிமலையும், வெள்ளச்சேதமும இன்னபிற அழிவுச் சகதிகளனைத் தும் தென்னாட்டில உண்டாகவில்லை என்று எண்ண இடம் உண்டாகிறது. நடராஜர் தன்னிற்பிரியா இறைவி பார்க்க ஆடுகிறார். ஏன்? நாமெல்லாம் இயல்பினன் இல்வாழ்க்கை வாழவேண்டி ஆடுகிறார். அவர் அங்ஙனம ஆடாதிருப்பரேல் நாமெல்லாம் யோகநெறியிற் சென்று பிஞ்சிலே பழுத்த புளியங்காய்போலாவோம் என்பது அவர்தம் திருவுள்ளமபோலும்! இதனை மணிவாசகர்:—

"தென்பா லுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெருமபித்தன் காணேடீ
பெணபா லுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

எனப்பெண்கள் விளையாடும் சாழல் விளையாட்டின்மூலம் ஐந்தொழில புரிந்திடும் அமபலவாணரது ஆடலின் அவசியத்தைக குறிக்கிறார்.

இங்ஙனம் நம்பொருட்டாக இறைவன் விரும்பி ஆடும இடங்கள் பல. ஆயினும், சிறப்புமுறையில ஐந்து இடங்களைக குறிப்பிடலாம். அவையாவன:- தில்லை, மதுரை, நெல்லை, குற்றாலம், ஆலங்காடு. இவ்விடங்களி லுள்ள சபைகளின் பெயர்கள் முறையாகப் பொன்னம் பலம, வெள்ளியமபலம், தாமிர அம்பலம், சித்திர அம் பலம, இரத்தின அம்பலம் என்பனவாகும். இவற்றுள், தில்லைப் பொன்னமபலத்தில் நடிக்கும் இன்னமுதைக காண ஆனித் திருமஞ்சனத்தன்றும், மார்கழித்திங்கள் ஆதிரைநாளன்றும் பல்லாயிரமககள் திரள் திரளாக வந்து தரிசித்துச செலகிறார்கள். இதனல் தில்லைப் பொன்னம்பலமே சிறப்புடைத்தெனத் தெரிகிறது. மதுரையில் வெள்ளியம்பலத்தில் பாண்டிய மன்னன்

வேண்டுகோட்கிணங்கிக் கடவுள் கால்மாறியாடினர் என்பது வரலாறு ஆகும். மற்றும் மூன்றிடங்களிலும் கடவுள் இன்றியமையாக காரணங்களை முன்னிட்டு ஆடியருளகிருர். அவற்றை விளக்கமாக அறிதற்கு அவ்வத தலவரலாறுகளை ஆராய்தல்வேண்டும். பொது வாகக கடவுள் நடராஜர் உருவத்தில் இந்த ஐந்து இடங் களிலிருந்து பஞ்சகிருத்தியதலைதயும செய்தருளுகிருர்.

இனித் தாண்டவமாடும் சபாபதியின் உருவ அமைப்பு முறையைக காண்போம். கங்கை சுமந்த தலை, நிலா அணியப்பெற்ற முடி, குனித்த புருவம், மூககண் பார்வை, கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பு, வந்த அன்பர்களை என்றுவநதாய் என அழைக் கும் குறிப்புடன் கூடிய திருமுக மணடலம், விரிந்து குளிர்நத சடை, பவளம்போன்ற மேனி, அமமேனியில் பூசப்பட்ட பாலபோன்ற வெ...ணீறு, நாகாபரணம, இடையில பாய்புலித்தோல ஆடை, உடுககை தாங்கிய வலககை, சுடர்விட்டெரியும நெருப்பு தங்கிய இடககை, அபயமளிககும வலககை மற்ருென்று, தூககிய திருவடி யைக காட்டும இடககை மற்ருென்று, ஆணவவடிவ மாய்த் திகழும முயலகன் என்பானை மிதித்து ஊன்றிய வலககால், தூககியமுறையில் வளைந்து அன்பர் தலையில் அமையும் முறையில உள்ளங்கால் குழிந்து வளைந்து தொங்கிநிற்கும குஞ்சிதபாதம், இந்நிலையில் உள்ள இந்த நடராஜர் உருவினைச் சுற்றி அமைந்துள்ள பிர ணவம எனப்படும் ஓங்காரம். இககோலந்தான் நடராஜர் உருவமாகும். இவ்வுருவினைத்தான் அப்பமூர்த்தி முதலி யோர் கண்டனர். ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங்கரணங்கள் சிந்தையே ஆகக கண்டு மகிழச்சி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தனர். இத்தகைய நடராஜ உருவ அமைப்பின் உட்பொருளே ஐந்தொழிலாகும்

[வரும்]

பரிமேலழகர் பகாட்டும்

வை. திருஞானசம்பந்தன்

நூலாசிரியரது உள்ளக்கிடக்கையையும், உலகத்தின் உண்மைத் தத்துவத்தையும், அதிகாரத்தின் ஆட்சிமுறையையும் கொண்டு உரையாசிரியர் நூலுக்கு உரை எழுதவேண்டும். அவ்வாறன்றித் தன் கருத்தைத் தள்ளாதிருக்கவேண்டுமென்றெண்ணி, எளியநடையில் எல்லாருக்கும் விளங்க இருக்கும் நூற்பொருளை விபரீதப் பொருள்கொண்டு வீணே விதண்டாவாதத்தைக் கிளப்பிவிடுதல் கிள்ளுக்கீரையன்று. சிலபல இடங்களில் நுண்பொருளையும் கண்டோம் என்ற கருத்துடையாராய்க் கண்ட இடங்களிலும் கலைக்குதவாதபடி எழுதுதலும் ஏற்புடைத்தன்று. அந்தமுறையில் வள்ளுவர் வகுத்த திருக்குறளுக்குத் திறமைகொண்ட உரையாசிரியர்கள் பலர் இருக்கையிலும் இன்று பரிமேலழகர் பகர்ந்த உரைப்பொருளே உலகு விரும்புகிறது.

காரணம் என்ன எனில் பரிமேலழகரின் பதப்பொருளின் பான்மையேயாகும். எனினும் இவை ஏற்ற இடம் சிலவே. ஏலாத இடம் பல. அந்த முறையில் நிலையாமை என்ற அதிகாரத்தின் எட்டாவது குறட்பொருள் ஏற்புடைத்தாமா என்பதை என்னறிவு ஏற்கவில்லை. எடுத்துக்காட்டும் கீழே: "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே உடம்போடு உயிரிடைநட்பு" என்ற வள்ளுவர் வாய்மொழிக்குப் பரிமேலழகர் பகர்ந்த பதப்பொருள், 'முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப, அதனுள் இருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோன தன்மைத்து உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு' என்பதாகும். வள்ளுவர் வகுத்தவழி முறைப்படி,

"நெருநல்உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு."

என்றும், அடுத்து,

"ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப
கோடியும அல்ல பல."

என்றும், மேலும் "குடம்பை..............நட்பு" என்ற குறளும வைப்புமுறையினைச் சிறிது ஆய்வாம். ஈண்டு அதிகாரப்பட்டது நிலையாமையாகும. எனவே 'நெருநல் உளன்' என்ற குறளில, நேற்று இருநதவன இன்று இலலையாகிறான் என்று இயம்பப்படும பெருமையுடைத்து என்கிற பெற்றியால நேற்று இன்று என்கிற இரண்டு நாளைய கால அளவு கருத்தாகிறது. அடுத்த குறளில் 'ஒருபொழுதும்' என்றபடியால, ஒருநாளைய கால அளவு கருத்தாகிறது. அடுத்த குறளில அந்த ஒரு பொழுதினும் குறைந்த அளவே இருககவேணடும என்பதே ஆராய்ச்சி உடையார் அமைததுககொள்ளவேண்டிய அமைதியாகும். மேலும ஒன்பதாவது குறளாகிய "உறங்குவது போலும் சாககாடு உறஙகி, விழிப்பதுபோலும் பிறப்பு" என்றபடியால், இப்பொழுது நல்லபடியாக உறங்கினேன், எழுந்திருககவில்லையே என்ற எளிய மக்களும் வழககாறறில் வழங்கும் வாய்மொழியாகும். எனவே, இதிலிருந்து பெறப்படுவன, ஆறாவது குறளில் நேற்றும இன்றும, ஏழாவது குறளில ஒருநாளைய பொழுதும, எட்டாவது குறளில அதனினும குறைநத கால அளவும, ஒன்பதாவது குறளில் உறங்கலும விழிததலும் நிலையாமையை நிரூபிககவந்த காலககருவிகளாகும.

அவ்வாறன்றிப் பரிமேலழகர் யட்டும் குடம்பை என்பதற்கு முட்டை என்று பொருள்கொண்டார். அவ்வாறு பொருள்கொள்ளின் முட்டையினுள் இருககும் குஞ்சு 21 நாட்கள் அவையமவைத்த பின்னரே வெளிவருகிறது. அககுஞ்சு அத்தனைநாள் முட்டையினுள் இருத்தல் கால அளவுககு ஏற்புடைத்தன்று. மேலும முட்டையினுள் இருந்த குஞ்சு வெளிவந்தவுடன் இறக்கை முதலியன வளர்தற்குக காலம்மிகுதியாகிறது. பிறநதஉடன குஞ்சு பறப்பதுமிலலை. எனவே குடமபை எனபதற்குக "கூடு" எனற பொருளே ஏறபுடைத்தாகும். எவ்வாறெனில் கூட்டிலுள்ள பறவை, கூட்டில் தங்குதலும் பின் அது பறந்துபோதலும் உடலுக்கும்

உயிர்க்கும் உள்ள நட்புமுறையாகும். இவ்வாறு பொருள் கொள்ளின் பொழுதின் காலஅளவைக்குக் குறுகியதாகத் தென்படுகிறது. நிலையாமை அதிகாரத்தின் குறள் வைப்புமுறைக்கும் கால அளவு சுருங்கிச் செல்கிறது என்பது பெறப்படுகிறது. மேலும் மணக்குடவர், காளிங்கர் முதலானவர்கள் இப்பொருளே கொண்டுள்ளார்கள். மணக்குடவர் உரைக்குப் பரிமேலழகர் பகரும் மறுப்பு, 'அது புள்ளுடன்தோன்றாமையானும், அதன்கண் அது மீண்டு புகுதல் உடைமையானும் உடம்பிற்கு உவமை ஆகாமை அறிக' என்றார். இதுவும் ஏற்புடைத்தன்று எவ்வாறெனில் புள்ளுடன் தோன்றாமை ஒன்றைக்கொண்டு மட்டில் உரைத்தால் கால அளவிற்குப் பொருந்துமாறில்லை. மேலும், உவமை, முட்டையுள் தோன்றும் புள் என்றமையால் கால அளவு முற்கூறியபடி நீட்டிக்கிறது. அடுத்து 'அது மீண்டு புகுதல் உடைமையானும்' என்பது. புள் கூட்டிலிருந்து முதன் முறையாகப் பறந்து செல்கிற அந்த அளவே உவமைகொள்ளவேண்டும். அவ்வாறன்றி மீண்டும் புகுதல் கொள்ளின் நிலையாமை யதிகாரத்திற்கும், கால அளவிற்கும் பொருந்துமாறில்லை மீண்டு புகுதல் கொள்ளின் உயிரும் இந்த உடலைவிட்டு மீண்டு மற்றொரு உடம்பில் சென்று சேர்கிறது என்ற செம்மொழியையும் மறந்தாராகிறது. எனவே உவமை ஒரு அளவிற்குக் கொள்ளல் வேண்டும்.

எனவே இதுகாறும் கூறிய அதனுள் புள் தான் இருந்த கூடு தனித்துக்கிடப்ப அந்த அளவில் பறந்து செல்லும் கால அளவே உடலுக்கும் உயிர்க்கும் உளதாய நட்பு என்பதாகும். இவ்வாறு உரை கொண்டால் தான் 6-வது குறள் முதல் 9-வது குறள் வரையிலும் கால அளவு சிறுத்துக்கொண்டே வருகிறது என்பது அறியக்கூடும். நிலையாமை அதிகாரத்திற்கும் நிலைமைத் தன்மை இன்ன அளவைகள் வரையில் இருக்கின்றன என்பது பொருத்தமுடைத்து.

மதிப்புரை :-

1 திருவள்ளுவர் ஒருதுறைக்கோவை

திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் ஒவ்வொன்றுக்கும ஒவ்வொரு பாடலாக 133 பாக்கள் இதில் உள்ளன. ஒரு துறையிலேயே இவ்வளவு மிகுந்த பாடல்களை இயற்றுவதில் எவ்வளவு அருமைப்பாடு இருக்கிறது. திராவிடக்கவிமணி. ஸ்ரீ வே முத்துசாமிஐயா, M.A L.T., அவர்கள் அப் பாக்களை மிக எளிமையில செமபாகமாக ஆக்கித்தந்துள்ளார்கள் பல அறிஞர்களின் பாராட்டுரைகளும பெற்றுள்ளது. அன்பர்கள் அறிவுக்கு விருநதாக விளங்கும் இநநூலை 'அரங்கநாதபுரம; திருக்காட்டுப்பள்ளி P, O.' என்ற ஆசிரியா முகவரிககு எழுதிப் பெறலாம விலை அணா 10.

2 பிரபுலிங்கலீலை உரையுடன்

கற்பனைக் களஞ்சியம சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய இந்நூல் படிபபாாககு மேலும் மேலும இன்பநதந்து நிற்கும் என்பதை யாவரும அறிவா இத்தகைய சிறநத இநநூல் (முதல் ஐந்து கதிகள) சென்னைப பலகலைககழக் தமிழ்வித்துவான் தோவுக்குப் பாடமாக வைக்கப்பட்டுளளது. படிக்கும மாணவாகளுககு வசதியாக மயிலம ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் அவர்கள திருவுளளபபாங்கின் வண்ணம. மயிலம் தமிழ்க் கல்லூரித தலைமையாசிரியா வித்துவான, சிவத் திரு. S. துரைசாமிஐயா அவாகள் பதவுரை எழுதியுள்ளார்கள் வேண்டிய அளவு விசேடவுரையும் தாபபட்டுளளது. ஆங்காங்கு சொல் நயஙகளை எடுத்துககாட்டி, இலககணககுறிப்புகளையும உணர்த்திச செலகினறது. மாணவாகள பயனபடுததிக் கொளவார்களாக. விலை ரூ 2—8—0 கிடைக்குமிடம:- 'சிவா எமபோரியம; புததகவியாபாாம, மயிலம. S. I. Ry.

கடிதங்கள்:

ஸ்ரீ சுவாமிஜி சிவானந்த மகராஜ் அவர்கள்

ரிஷிகேசம்.

சைவஒளியே! சைவசித்தாந்தம் தழைத்து ஓங்க அரும்பணி ஆற்றிவரும் சிகாமணியே! மக்களின் துயரைத் தீர்க்க வந்த தெய்வப் புதல்வனே! கருணாநிதியே! சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட பெரியோரே! தமிழ்த் தாய் பெற்ற அருந்தவப் புதல்வரே! வணக்கம். நமஸ்காரம்.

தருமை ஆதீனத்தில் மகாசன்னிதானம் அளித்த இனிய வரவேற்பை நாங்கள் எந்நாளும் மறவோம். இவ்வரவேற்பின் சிறப்பை வர்ணிக்க முடியாது. இது ஒரு தனி அழகே.

திருநெல்வேலியில் விஜயம்செய்திருந்தபொழுதும், தங்களுடைய ஆதீனமடத்தில்தான் தங்கியிருந்தோம் அங்கும் சிறந்த முறையில் உபசரிக்கப்பட்டோம். ஆனந்தம்; ஆண்டவன் சந்நிதானத்தில் ஒரு குறைவும் கிடையாது.

மகாசந்நிதானம் அன்புடன் அளித்த ஆதீன வெளியீட்டுப் பொன்மலர்கள் அநேகம் பெற்றோம். மகாசந்நிதானத்தின் சைவப் பிரசாரப்பற்றும், தமிழ் ஆர்வமும் பொங்கித்ததும்புவதை இப்புத்தக வாயிலாகவும் அறிகின்றோம். உலக விஷயங்களில் மூழ்கி மதிமயங்கிக் கிடப்பவர்களைக் கைதூக்கிவிட இதைவிடச் சிறந்த சாதனம் வேறு இல்லை.என்பது உறுதி. மதப்பிரசாரம் புத்தக வாயிலோடு மட்டும் நின்று விடாமல் ஆங்காங்கு மோட்டார் வாகனத்தின் மூலமாகவும் நடைபெற்று வருவதைப் பார்த்தோம்.

தென் இந்தியா முழுதும் செறிந்துள்ள ஆலயங்களுக்கு ஒப்பவே மகாசந்நிதானத்தின் ஆலயங்களும் சிறந்து விளங்குகின்றன. இம்மாதிரி ஆங்காங்கு கோயில்களையும் மடங்களையும்

ஆஸ்பத்திரிகளேயும், கல்லூரிகளேயும, புஸ்தக ஆலயங்களேயும், ஏற்படுத்தி ஜனங்களிடையே தெய்வபக்தியை நிரப்பி அவர்களுக்குத் தொண்டு செய்வதையே மகாசந்நிதானம கடமையாகக் கொண்டுள்ளார். அன்னதானம, வஸ்திரம, பொருள் தானம் முதலியவைகளே ஏராளமாக வழங்கி ஜனங்களின் பொது நலன்களேயும கவனித்துவருகிருர்.

இவவாறு தமிழுக்கும சைவத்திற்கும தக்க தொண்டாற்றி மக்களின நலனுக்கு அருமபாடுபடடுவருமமகாசந்நிதானத்திற்கு இறைவன் பூரண ஆயுளே அளிப்பாராக; இவஅரிய பணியை ஆற்றிவரும ஆதீனம என்றும நிலேத்து நிறகுமாறு, இறைவன் அருள் புரிவாராக.!

ஓம சாநதி! ஓம சாநதி!! ஓம சாநதி!!!

திருக்குறளேப்பற்றியன:

திரு T. M. குமரகுருபரன் B A, B.L., அவர்கள்,
ஸ்ரீவைகுண்டம.

உயர்ந்தரகத்தாளகளில, கண்கவர்வனப்பில் நேர்த்தியான அசசில அமைககப்பெற்ற புத்தகம அருள பிரசாதமாகக கிடைககப்பெற்ற பெரும்பேற்றிற்குப் பணிவான நன்றியை வணககத்துடன் விண்ணப்பிததுக கொள்கிறேன்.

சிவக்கவிமணி,
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் B. A., அவர்கள்,
கோயம்புத்தூர்.

மிக அரிய, அழகிய, உயர்ந்த பதிப்பு. கற்ரேர்களும் கற்போர்களும மறறேர்களும இன்றியமையாத சேமநிதி. இதற்குத் தமிழுலகம ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசநநிதானங்கட்கு மிகக கடமைப்பட்டுள்ளது. நன்றி.

திரு சர்தார். அ. வேதரத்னம் அவர்கள், வேதாரண்யம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் தமிழ்வளர்ச்சிக்காக எத்தனையோ சிறந்த சேவைகள் செய்துவருகிறீர்கள். அவை அனைத்திற்கும் தலையாயது இப்பொழுது எடுத்துககொண்டிருககும் முயற்சியும், அதன்மூலம் வெளியிட்டிருககும அப்பதிப்பும. அது தமிழநாட்டிற்கும், தமிழிற்கும, சிறப்பாகத் "திருககுறளுககும்" செய்திருககும் ஓர் பிரமாதமான சேவையாகும. இத்துறையில் சநநிதானம அவர்கள எடுத்துவரும அரும பெரும்முயறசிகள் அனைத்தும் பூரணவெற்றிபெறுமாறு இறைவனைப் பிரார்த்திப்பதைத் தவிர எனபோன்ற எளியேனுல் வேறு எனன கைம்மாறு செய்யமுடியும்? தங்கள் அன்பிற்கு என உள்ளம நிறைந்த வணககம்.

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், திருப்பனந்தாள்.

தமிழின் உயிர் உடல்களாகத் திகழும திருவாசகத்தையும, திருககுறளையும பதிப்பித்தருளியமைக்குத் தமிழ்மககள் கடமைப்பட்டவர் ஆவர். (பிறவெளியீடுகளும் அருமையாயிருகக) இவ்விரண்டு சிறந்த நூல்களையும மேனுட்டுப் பெருநூல்கள் அச்சிடப்பெறுவது போனறு சீரியமுறையில அச்சிட்டது இவ்விரு பெருநூல்களையும அறிந்து விழையும உலகப் பெருமககளும இறும்பூதடையுமாறுசெய்யும் என்பதில் ஐயமிலலை.

திரு. T. P. மீனுட்சிசுந்தரனுர் M.A., B.L., M.O.L., அவர்கள், சென்னை.

திருககுறள் உரைவளம் தீபாவளி சைவத் தமிழ்ப் பரிசிலாக வந்துசேர்ந்தது, யாருககுத்தான் மகிழ்ச்சி தராது? அழகிய படம்; அழகிய உயரிய கருத்தினை

விளக்கும் நல்ல கட்டு; பெரிய எழுத்துக்கள்; நல்ல தாள்கள். சிறந்தநூல்—உயர்ந்த உரைகள்—சைவம் தமிழாக வடிவெடுத்த பண்பாட்டின் பெருமை—அடிக ளின் ஆணை—அன்பு—அருள் இத்தனையையும இந்த நன்னூலில காணும பேறுபெற்றவர்க்கு என்ன கைம் மாறு செய்தல்கூடும். திரு, ச. தண்டபாணி தேசிகர் வாயிலாகத் தருமபுரத் தமிழ்த்தொண்டு சிறந்து இடையீ டின்றிப் பாய்ந்து சைவத்தினைத் தமிழாக வளர்க்கின்ற வாய்ப்பினைத் திருவருள்பாலிக்கும் அடிகள் பல்லாண்டு வாழ்க! வாழ்க!! வாழ்க!!! என வாயோவாது வாழ்த்தி வணங்கவே மனமும் துள்ளுகிறது.

திரு. C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள்,

கோயமபுத்தூர்.

வெளியீடு மிகச சீரியமுறையில் பதிப்பிக்கப்பெற் றுளது. மிகவும் உபயோகமானதாக இருக்கின்றது

பமபாய்த் தமிழ்ச் சங்கம், மாதுங்கா.

குறள் ஈனற குரல் வையமெலலாம முழங்குகிறது. சர்வதேச இலக்கியத்திற்குத் தமிழுலகு தெய்வ வான் மறையைத் தந்து, வான்புகழ்கொண்டது. அறத்தைப் பாலாக்கி அமிழ்தமென உதவிய வள்ளுவனது வாக்கின் ஓர் பகுதியை, அழியாத அழகியமுறையில் தமிழ்வளர்க் கும தருவான தங்களது ஆதீன வெளியீடு 'திருக்குறள்' நன்கு எதிரொலிக்கிறது. இந்த அருமையான நூலை எங்களுக்கு அனுப்பி உதவியமைக்கு மிகக நன்றி. எதிர்காலத்தில் தாங்கள் வளர்க்கும் தமிழ்ச் சின்னங்களை ஆர்வமுடன் நோக்குகிறோம்.

இரண்டாகுவதே
ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலின் தோன்றும் அதுவே. 72

காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்று
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்று
அறுத்தலின்குறைத்தலின்தொகுத்தலின்பிரித்தலின்
திறுத்தலின் அளவின் எண்ணின் என்று
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்று
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார். 73

என் - எனின், எழுவாய் வேற்றுமை அதிகாரம் உணர்த்தினர்; இனி அம முறையானே இரணடாம வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: இரண்டாம எண்ணுமுறைககண்ணதாகிய ஐ என்னும் பெயரையுடைய வேற்றுமைச்சொல் யாதானும் ஓரிடத்து வரினும் வினையும் வினைககுறிப்பும் என்று சொல்லப்படுகின்ற இரண்டும் அடியாகவரும். பொருள்பற்றிச் சொலலின் காப்பு என்பது முதலாய் சிதைப்பு ஈருய் ஓதப்பட்ட இவையும், இவைபோல்வன பிறவுமாகிய அவ்வவ்வினை வினைககுறிப்பு என்னுகின்ற முதற்பொருளைப்பற்றி வருகின்ற எல்லாச் சொற்களும இரண்டாவதன் கூற்றன என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: மரத்தைக் குறைத்தான் என்பது வினை. குழையையுடையன் என்பது வினைக்குறிப்பு. காப்பு-ஊரைக் காக்கும். ஒப்பு-தாயை யொக்கும். ஊர்தி-யானையை ஊரும். இழை-எயிலையிழைக்கும். ஒப்பு-கிளியையோப்பும்; இவை வினை. புகழ்-ஊரைப் புகழும். பழி-நாட்டைப் பழிக்கும். பெறல்-ஊரைப் பெறும். இழவு-ஊரை இழக்கும். காதல்-மனைவியைக் காதலிக்கும்; இவை வினைக்குறிப்பு. வெகுளி-படையை வெகுளும். செறல்-செற்றாரைச்செறும். உவத்தல்-தாயையுவக்கும்; இது வினைக்குறிப்பு.

கற்பு-நூலைக்கற்கும். அறுத்தல்-ஞாணை அறுக்கும். குறைத்தல்-மரத்தைக் குறைக்கும். தொகுத்தல்-நெல்லைத் தொகுக்கும். பிரித்தல்-வேலியைப்பிரிக்கும். நிறுத்தல்-பொன்னை நிறுக்கும். அளவு-அரியை அளக்கும். எண்-அடைக்காயை எண்ணும். ஆக்கல்-அறத்தையாக்கும். சார்தல்-வாய்க்காலைச் சாரும். செலவு-நெறியைச் செல்லும். கன்றல்-சூதினைக்கன்றும். நோக்கல்-சேயை நோக்கும். அஞ்சல்-கள்ளரை அஞ்சும். சிதைப்பு-நாட்டைச் சிதைக்கும் எனவும் வரும். அன்ன பிறவும் என்றதனால் விரலைமுடக்கும், நாவினை வணக்கும். இவை வினையும். அறவினையுடையன், ஊரை இன்புறும் இவை வினைக்குறிப்பும் கொள்க. பிறவும் அன்ன.

காப்பின் என்பது முதலான இன்னெல்லாம் உருபும் அன்று, சாரியையும் அன்று, அசைநிலை எனக் கொள்க. இடைநின்ற என்று எண்ணிடைச் சொற்களாம்.

மற்றைய வேற்றுமைபோல் இது படும் பொருண்மை உணர்த்ாது முடிபு உணர்த்தியது என்னை; இம்முடிபு ஏனை வேற்றுமைக்கும் உளவாலெனின், ஈண்டு முடிபு அன்று உணர்த்தியது; வினை வினைக்குறிப்பின்மேலிட்டு

அது படுஞ் செயப்படுபொருளினை உணர்த்திற்றாக உரைக்கப்படும். செயப்படுபொருண்மையாவது என்னை யோவெனின் ஒருவன் செய்யும் தொழிலினைத் தானுறு தல் எனக் கொள்க. அத்தொழிலினை உறுவதிதுவேயோ அத்தொழில் செய்வானுங் கருவியுஞ் செய்கின்ற கால மும் இடனும் என இன்னோரன்னவும் அத் தொழிலுறு மாலோவெனின், அவை உறும் எனினும் பெரும்பான் மையும் இதன் கண்ணது என்பது கருத்து.

வினை என்றது வினைக்குறிப்பு என்றது என்னையோ எனின், மரங்குறைத்தான் என்புழிக் குறைக்கப்படுதல் என்பது போலாகாது, குழையையுடையவன் என்புழிக் குழையினுடைமைப்பாடு செயப்படுபொருளாய் விளங்கி நில்லாமையின் வேறு கூறினார் என்பது.

அச் செயப்படு பொருள்தான், இல்லதொன்றாய் உண்டாக்கப்படுவதும், உள்ளதொன்றாய் உடல் வேறு படுக்கப்படுவதும், உள்ளதொன்றாய் ஒரு தொழில் உறு விக்கப் படுவதும், உள்ளதொன்றாய் ஒன்றனாலுறப்படுவ தும் எனப் பலவகையாம். இல்லதொன்று உண்டாக்கல்- எயிலையிழைத்தான் என்பது. உள்ளதொன்றனை உடல் வேறாக்கல் - மரத்தைக் குறைத்தான் என்பது. உள்ள தொன்று ஓர் தொழிலுறுவித்தல் - கிளியையோப்பும் என்பது. உள்ளதொன்றனை யொன்றுறுதல் - நூல் நூற்றான் என்பது. பிறவும் அன்ன.

இன்னும் இச் செயப்படுபொருள்தான் தன்கண் ணும் ஓர் தொழில் நிகழ்ந்து செயப்படுபொருளாவனவும், தன்கண் தொழில்நிகழாது செயப்படுபொருளாவனவும் என இருவகைய. தன்கண்ணும் தொழில் நிகழ்ந்தது - அறுத்தல், குறைத்தல் என்பனவாம்; அறுத்தல், குறைத் தல் மரமுதலாய தன் கண்ணும் நிகழ்ந்தன ஆதலின்.

தன் கண் நிகழாதது, வாய்ககாலைச் சாரும் என்றாற் போல்வன. பிறவும அன்ன.

இன்னும் இரண்டாவதன் செயப்படுபொருள் தெரி நிலைச் செயப்படுபொருளும், தெரியாநிலைச செயப்படு பொருளும் என இருவகைத்தாம. தெரிநிலை மரத்தைக குறைத்தான் எனபது. தெரியாநிலை சாத்தனால் மரம் குறைககப்பட்டது என்பது. மற்றிஃது எழுவாயன்றோ எனின், சொல் நிலை அன்னதாயினும சாத்தன என நின்ற உருபினை நோககப் பொருணிலை அன்னது அன்று என உணர்க. சோற்றை அட்டான் எனச் செய்வான் கருத்துள்வழிச் செயப்படுபொருளாதலும சோற்றைக் குழைத்தான் எனக் கருத்தில்வழிச் செயப் படுபொருளாதலும என இருவகைய. இனிச் செய்வா னும செயப்படுபொருளும என்னும இரண்டும் ஒன்றே யாயும் வரும.

உ-ம்: சாததன தன்னைக குத்தினன் எனவரும்.

இனிச செயப்படு பொருட்கேதுவாயதூஉம் செயப் படுபொருளாய் வரும. அவை கற்கப்படும் ஆசிரியர், கற்கப்படா ஆசிரியர் எனவரும். மற்றும் இதன்கருத்து விகற்பம் உரையிறகொள்க. (௧௦. ௧௧)

மூன்றாகுவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே. 74

அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனி னாதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி

அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனோ டியைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னான் ஏது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார். 75

என் - எனின், மேல் நிறுத்த முறையானே மூன்றாம வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மூன்றாமெண்ணுமுறைக் கண்ணதாகிய ஒடு என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல வினைமுதல கருவியாகிய காரணங்களை உடைத்து அஃது வருமாற்றைச் சொலவின் ஒன்றனொன்று பண்ணப்படும பொருணமை, ஒன்றனொன்று நகுதல் என்னும பொருண்மை, ஒன்றனொனறு தொழிலுறு தல் என்னும பொருண்மை, ஒனறனொனறு ஆதல எனனும பொருண்மை, ஒன்றனொன்றைக கோடல் என்னும பொருணமை, ஒன்றனோடொன்று மயஙகல் என்னும் பொருணமை, ஒன்றனோடொன்றியைந்து ஒரு வினையாதல என்னும பொருண்மை, ஒன்றனோடொன் றியைந்து வேறுவினையாதல என்னும பொருணமை, ஒன்றனோடொன்றியைந்து ஒப்பல்லா வொப்பினை யுரைத்தல என்னும பொருண்மை, இத்தன்மையான் என்னும பொருண்மை, ஏதுப்பொருண்மை என்னும இவையும், இப்பெற்றியானே இதனிடத்து வருகின்ற அத்தன்மையான பிறபொருளகளும் அமமூன்றாவதன் கூற்றன என்று சொலலுவர் புலவர் என்றவாறு.

மூன்றாவதற்கு உருபு ஒடுவும், ஆனும் என இரு வகைத்து. ஆன் என்பது எடுத்தோதிற்றிலரெனினும் "அதனினியறல் அதற்றகு கிளவி" என ஓதிய வாய் பாட்டான் பெறுதும் என்பது.

வினைமுதல் கருவி என்றோதிய பொருண்மை இவ் விரணடுருபிற்கும் ஒக்கும் என்பது.

உ-ம்: வினைமுதல - கொடியொடு துவகருண்டான். நாயாற்கோட்பட்டான். கருவி - ஊசியொடு குயின்ற தூசும் பட்டும், வேலானெறிந்தான் எனவரும்.

அதனினியறல் - தச்சன் செய்த சிறுமா வையம் என்பது. அதற்றகு கிளவி - வரயாற்றக்கது வாய்ச்சி என்பது. அதன் வினைப்படுதல் - நாயாற்கோட்பட்டான், சாத்தனுன் முடியுமிககருமம என்பன. அதனினுதல் - வாணிகத்தானுயினுன் என்பது. அதனிற் கோடல் - காணத்தாற்கொண்ட அரிசி எனபது. அதனொடு மயங்கல் - எண்ணொடுவிராய அரிசி என்பது. அதனோடியைந்த ஒருவினைக கிளவி - சாத்தனொடுவந்தான் என்பது. அதனோடியைந்த வேறுவினைக கிளவி - மலையொடு பொருத மால் யானை காவொடறக்குளந்தொட்டான் என பன. வேறு வினை எனபது ஒன்றன்கணணே வினையாதல். அதனோடியைநத வொப்ப லொப்புரை - நூலொடு நார் இயைந்தது போலும, மூத்தொடு பவழம் கோத்தது போலும் என்பன. இனனுன் என்பது, இத்தன்மை யான் என ஒருவன் பெற்றி கூறல்; அஃது கண்ணுற் கொத்தை, காலான் முடவன் என்பன. ஏது-முயற்சியிற் பிறத்தலான் இசை நிலையாது எனபது.

அதனினியறல் முதலாக அதனிற்கோடல் ஈறுக ஓதிய பொருண்மை எல்லாம சூத்திரத்துள் ஆனுருபின் சுவடுபட ஒதினமையின் பெருமபானமை ஆனுருபிறகே உரியவாம. சிறுபான்மை ஒடுவுருபிற்கும் வருவன உள வேல் கொள்க.

இவற்றுள், அதனினியறல், அதன்வினைப்படுதல் என்றோதிய இரண்டும வினைமுதற் பாகுபாடு. அதனிற் கோடல், கருவியின் பாகுபாடு போலும. அதற்றகு கிளவியும் அதனினுதலும் ஏதுவின் பாகுபாடு. அதனொடு மயங்கல் முதலாக அதனோடியைந்த ஒப்பலொப்புரை

ஈறாக ஓதின எல்லாம், ஒடுவுருபுகொடுத்தோதினமை யின் பெரும்பான்மையும் ஒடு உருபிற்கே உரிய; சிறு பான்மை ஆனுருபிற்கும் வருவன உளவேற்கொள்க.

இன்னான் என்னும் பொருண்மையும், ஏது என் னும் பொருண்மையும் ஓருருபின் எடுத்தோதாமையின் வழக்கிற்கேற்றவாறு கொள்ளப்படும்.

முன்னும் ஏதுவின் பாகுபாடோதிவைத்துப் பின் னும் ஏது என வோதியது அவ்வாறொழிய வருவன வற்றைக் கருதிப் போலும். அவ்வேது காரக ஏதுவும் ஞாபக ஏதுவும் என இருவகைத்து. முயற்சியிற் பிறத் தல் காரகம், பிறத்தலான இசைநிலையாது என்பது ஞாபகம். அஞ்ஞாபகத்தைப் போலும் ஈண்டு ஏது என ஓதியது. அன்ன பிறவும் என்றது சூத்திரத்துள் எடுத் தோதின பாகுபாட்டினொழிந்தனவும் பிறபொருட்பாகு பாடுகளும் கருதிப் போலும். அவையெல்லாம் வந்தவழிக் கண்டு கொள்க. (கஉ, கந)

நான்காகுவதே
கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினும் கொள்ளும் அதுவே. 76

அதற்குவினை உடைமையின் அதற்குடம் படுதலின்
அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின் அதற்பொருட் டாதலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பினென்
றப்பொருட் கிளவியும் அதன்பால என்மனார். 77

என் - எனின், நிறுத்த முறையானே நான்காம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் நான்காமென்னு முறைமைக்கண்ணதாகிய குவ்வென்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் யாதொரு பொருளினை ஏற்பதாக உணர்த்திநிற்கும்; இன்னும், அது தான்வரும் பொருட்பாகு பாட்டினைச் சொல்லின் ஒன்றற்கொன்று பயன்படுதலென்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று பொருள் மேற்கொடுப்பதாக உடம்படுதலென்னும் பொருண்மை, ஒன்றற் கொருபொருளுரிமையுள்வழிக் கூறிடப்படுதலென்னும் பொருண்மை, அமமுதற் பொருட்டாயாகலான என்னும் பொருண்மை, ஒன்றற்கொன்றுபொருத்தமுடைத்தாதல் என்னும் பொருண்மை, ஒருபொருளினைமேற் பெறுதல் காரணமாக ஒருதொழில்நிகழ்தலென்னுமபொருண்மை, ஒன்றற்கொன்று நட்பாதலும், பகையாதலும என்னும் பொருணமை, ஒன்றற்கொன்று காதலுடைத்தாதல் என்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று சிறத்தல் என்னும பொருண்மை என்று சொல்லப்பட்ட அப் பொருணமேல் வரும சொற்களும், நான்காம உருபின கூற்றன எனறு கூறுவர் புலவர் என்றவாறு.

எப்பொருளாயினும் என்றது, மூன்றிடத்துப் பொருள்களது பன்மைநோககி. சொற்கள் பொருள்களை உணர்த்துதல் உரிமைநோககிச் சொல்தன்மேல் வினைப்பட எப்பொருளாயினும் கொள்ளுமென்று கூறினரெனினும கோடலையுணர்த்தும் என்றவாறாகக் கொள்க.

உ-ம்: அதற்கு வினையுடைமை - சாத்தற்குச் சோறு கொடுத்தான் கரும்பிற்கு வேலி, மயிர்ககு எண்ணெய் எனபன. அதற்குடம் படுதல் - சாத்தற்கு மகளுடமபட்டார் சான்றோர் என்பது. அதற்குப் படு பொருள் - சாத்தற்குப் படுபொருள் கொற்றன் என்பது. அதுவாகு கிளவி - கடிசூத்திரத்துககுப் பொன் என்பது. அதற்கு யாப்புடைமை - கைக்கு யாப்புடையது கடகம்.

அன்ன பின்னரே யரியினாற் சாமர னண்டம்
மன்னி யேபுவி வீழ்தலும் வயமுடைப் போத்துப்
பின்ன ரன்னவன் சிரத்தினைக் கரப்பிர காரத்தா
லுன்னு மாத்திரை யொன்றினிற் பிளத்தலு முலந்தான்.

கு - ரை:- அரியினால் - சிங்கவீரனால்; தூக்கியெறியப்பட்டு. அண்டம் மன்னி - வானத்தை அடைந்து; புவி - பூமியில்; வயம் உடைபோத்து - வலிமையுள்ள சிங்கமானது. பின்னா - பின்பு அன்னவன் - சாமரனுடைய. சிரம் - தலை. கரமபிரகாரத்தால் - கையாகிய ஆயுதத்தினால்; கையினது அடியினால். பிளத்தலும் - பிளக்கவும். உலந்தான் - இறந்தான்.

வி - ரை:- போத்து என்பது ஆண்விலங்கு. "போத்தே யாண்விலங்கு" என்பது அரும்பொருள் விளக்கம். "கரப்பிர காரம்" என்பது "கரப்பிரஹாரேண" என்னும் வடநூற்றொடரின் தற்பவம். 8

அப்ப தந்தனி லுதக்கிர னணைதலு மவனை
யொப்பில பாதவங் குறும்பொறை யுந்தியே தேவி
துப்ப றக்கணஞ் சிதைத்தனள் கராளனுந் தோன்றக்
குப்ப தத்தினிற் றலந்தந்த முட்டியாற் கொன்றாள்.

கு - ரை:- அப்பதம் - அந்தச்சமயம். அணைதல் - போருக்கு வரல், ஒப்புஇல் - உவமையில்லாத, பாதவம் - பெரியமரங்களையும், குறும்பொறை - மலைகளையும் உந்தி - செலுத்தி, துப்பு அற - அவனது வலிமைகெடச்செய்து, கணம் சிதைத்தனள் - நொடிப்பொழுதில் கொன்றாள், தோன்ற-போருக்குவெளிப்பட, குப்பதம் - சிறிதுநேரம், தலம் - விரித்தவிரல்களையுடைய உள்ளங் கைகளினாலும்; விரல்விரித்தகரதலம். தந்தம் - பற்களாலுண்டாக் கிய காயங்களாலும்; யானையின்தந்தத்தாற் செய்த ஆயுதங்க ளாலும் எனலுமாம். முட்டியால் - குவித்தகைகளாலும்.

வி - ரை.- உதக்கிரன் கராளன் ஆகிய இருவரும் மகிடனுடைய சேனைத்தலைவர்களேயாவர். 9

தேவி யுஞ்சின முற்றுநற் கதையினாற் சேர்ந்த
மாவ லிகொளு முத்ததன் றன்னையு மடித்தாள்
மேவு பாட்களன றனைப்பிண்டி பாலத்தின் வீழத்தி
யாவத் தோணியாற் றாமிராந் தகர்தமை யட்டாள்.

கு - ரை.- கதை - தண்டாயுதம், சேர்ந்த - போருக்கு வந்த, மாவலி - மிகுந்தவலிமை, மடித்தாள் - கொன்றாள், மேவு - (உத்ததனுக்குப்பின்) போருக்குவந்த, பிண்டிபாலம - எறிவேல், எறியாயுதமாம், ஆவம்தோணி - அம்புப்புட்டியிலுள்ள அம்புகள், தாமிரஅந்தகர்தமை - தாமிரன் அந்தகன் என்னும் பெயருடையவர்களை, அட்டாள் - கொன்றாள். 10

அந்த முற்றிட வுககிர வதனன்மா வனுவும்
மூந்து முககிர வீரியன் றன்னையு முதனமைக
கொந்து மூன்றுநாட் டத்தனைச் சூலத்திற் குமைத்தாள்
சிந்தி னணவி ராற்பிடா லன்சிரந தேவி.

கு - ரை:- மா அனு - மகாவனு, அநதம் உற்றிட - மரணமடையசசெய்து, (பின்பு) மூன்றுநாட்டத்தனை - திரிநேத்திரன் என்பவனையும, குமைததாள் - அழித்தாள், பிடாலன் சிரம - பிடாலஸ்யன் என்பவனுடைய தலையை, தேவியானவள், நவிரால் சிந்தினள - வாளினால் சிதறமபடி வெட்டினாள்.

வி - ரை:- கொந்தும் என்பதற்கு மூர்க்கங்கொண்டுள்ள எனப் பொருள் கொள்க. கொந்து எனப் பதமபிரித்துக் கொத்துப்போன்ற எனப் பொருள்கொள்ளலுமாம. மூன்று நாட்டத்தினள் எனப்பாடம் கோடலுமொன்று. பிடாலன் - பூனைமுகமுடையவன். 11

கயவ னாகிய துர்த்தரன் றுன்முகக் கள்வன்
அயர்வு றும்படி யம்பிகை யேவினா லட்டாள்
துயரு றும்படை நாயகன் மாரொடுந் தொலைய
நயனம் பாடலத் துடன்மகி டாசுர னண்ணி.

கு - ரை:- றுன்முகக்கள்வன் - துன்முகனாகிய கள்வனும், ஏ - அம்பு, துயருறும் - தேவியின் ஆயுதங்களினால் துக்கமுற்றிருந்த, படை - அசுரசேனைகள், நாயகன்மார் - சேனைத் தலைவர்கள், தொலைய - அழியவும், அதனைக்கண்ட மகிடாசுரன், பாடலம் நயனம் - (கோபத்தால்) சிவப்பாகிய கண்கள். 12

மாகி டவ்வுரு வத்தினன் மன்னிய கணங்க
ளாக வத்திடை மடிந்திடத் துண்டத்தி னடியாற்
றோக முற்றிடத் துணித்தனன் குரத்தொழி றன்னால்
மோக முற்றிடச் சிலரைவா லதியினன் முடித்தான.

கு - ரை:- மாகிடம் - எருமைக்கடாவின் உருவத்தினன் - வடிவுடைய மகிடாசுரனானவன், கணங்கள் - தேவியின் படைகளாயுள்ள தேவகணங்கள், ஆகவத்திடை - போரில், துண்டத்தின் அடியால் - முகத்தின் அடிப்பாகத்தினால்; மூக்குநுனியினாலெனினுமாம். தோகம் - சிறுமை, வருத்தம், துணித்தனன் - துண்டம்செய்தான், (சிலரை) குரம் தொழில் - குளம்பினால் உதைத்தல், மோகம் - வருத்தம்; மயக்கமுமாம், (சிலரை) வாலதி - வால்; வாலினால் வீசுதல், முடித்தான் - அழித்தான். 13

சிலரைத் தன்மருப் பாற்பிளந் தான்சிலர் தம்மை
மலருங் கம்பலை யாற்சிலர் பிரமண மன்னும
உலைவின் வேகத்தா லொண்ணிசு வாசத்தாற் சிலரைத்
தொலைய வட்டனன் சைரிப வுருகொண்ட துகளோன்.

கு - ரை - மருப்பு - கொம்பு, கம்பலை - சப்தம், (கத்துதல்) பிரமணம் - சுழற்சி, உலைவு - அசைவு; "பிரமணமன்னும........ வேகம்" மண்டலாகார கதி என்க. நிசுவாசம் - வெளிவிடும

பெருமூச்சு, சைரிபவுரு - எருமைவடிவம், அகளோன் - குற்ற முடைய மகிடன், அட்டனன் - கொன்றான். 14

மிருகக் கோவினை யட்டிட வெய்யவன் விரைவி
னுருவக் கோட்டினாற் பூதரக் கோட்டினை யுடைத்தான்
குரவைப் பால்மகி தலம்பிளப் புறமிகக் குமுறி
நரலைப் பானகந் தரமெலா மிரலையா னறுக்கி.

கு - ரை:- மிருகம்கோவினை - சிங்கவீரனை, அட்டிட - கொல்லுவதற்கு, வெய்யவன் - மகிடன், உருவம் - நீண்டவுருவ முடைய, கோட்டினால் - தன்னுடைய கொம்புகளால், பூதரம் கோடு - மலையினுடைய சிகரங்கள்; மலைகளையெனினுமாம். குரம் வைப்பால் - (பெரிய) குளம்புகளைத் தூக்கிவைப்பதால், மகிதலம் பிளப்புஉற - பூமியைப்பிளக்கும்படிசெய்து, குமுறி - கருச்சித்து, நரலைபானம் - கடலைக்குடித்தலையுடைய, கந்தரம் - மேகங்களை, இரலையால் - (தனது) கொம்புகளால், நறுக்கி - துண்டித்து.

இச்செய்யுள், உற்றனன் என்னும் வினைமுடிபு பெற்றுப் பதினேழாவது செய்யுளில் முடிவதால் குளகமாம். 15

கொடிய வேகஞ்சேர் கொட்பினன் மகிதலங் குழைத்து
நெடிய வாலினின் புடைப்பினா லம்புதி நீண்ட
புடவி யெங்கணும் புரட்டியே யுயிர்ப்பினாற் பொங்கித்
தடம கீதரம் புவிவிழுந் தேசத மாக.

கு - ரை:- வேகம்சேர்கொட்பு - வேகப்பிரமணம்; வேகத்தோடுகூடிய சுழற்றுகை, மகிதலம் - பூமியை, புடைப்பு - அடித்தல், அம்புதி - கடல்நீரை, புடவி - பூமியின், எங்கணும்புரட்டி - எல்லாவிடங்களிலும் புரளுமாறுசெய்து, உயிர்ப்பினால் - சுவாச வாயுவினால்; மூச்சுக்காற்றினால், பொங்கி - கொதித்துமேல் எழும்பி, தடம்மகீதரம் - பெரியமலைகளானவை, புவி - பூமியில், சதம்ஆக - நூறாய்ப்பிளக்கும்படி.

வி - ரை:- சதமாக என்பது உற்றனன் என்னும் வினை முடிபு பெற்று அடுத்தகவியில் முடிவதால் இதுவும் குளகமாம். "தடமகீதரம் உயிர்ப்பினால் பொங்கி புவிவிழுந்தே சதமாக" எனக்கூட்டுக. 16

உற்றனன் பெருஞ் சினத்தொடு மகிடனு முமையாள்
மற்றவன் றனைப் பாசத்தாற் பிணித்தனள் மன்னோ
வற்ற மன்னதி லரியுருக் கொண்டிட வம்மை
கொற்ற முற்றிடச் சிரத்தினைத் தடிந்தனள் கொதித்தே.

கு - ரை:- உற்றனன் - போர்செய்யவந்தான், உமையாள் - தேவியானவள், அற்றம் அன்னதில் - அந்தச்சமயத்தில், அரிஉரு - (மகிடன்) சிங்கவடிவத்தை, கொற்றமுற்றிட - அவனது வலிமை முடிவடையும்படி, கொற்றம் உற்றிட, எனப்பிரித்துத் தனது வலிமை தோன்றும்படி; அல்லது வெற்றியடைதற்பொருட்டு எனப் பொருளுரைத்தலுமாம். தடிந்தனள் - வெட்டினாள். 17

அந்த வேலையி னாட்டமுஞ் சருமமு மத்தம்
விந்து மன்னிடும் புருடனைப் போர்செய மதித்தான்
சுந்த ரஞ்செறி யன்னையுந் தோணியாற் றொலைக்க
முந்து தோன்றினன் மும்மதக் கரியென மூடன்.

கு - ரை:- வேலை - சமயம், நாட்டமும் - வாளும், சருமமும் - கேடயமும், அத்தம் - கையில், மன்னிடும் - பொருந்தியுள்ள, புருடன் - ஆண்மகன், மதித்தான் - எண்ணினன், அன்னை - தேவியானவள், தோணி - அம்பு, தொலைக்க - புருடவுருவத்தை அழிக்கவும், மூடன் - மகிடனென்பவன், மும்மதம் கரி என - மும்மத யானைபோலக் கருவமுடையவனாய், முந்து தோன்றினன் - தேவியின் முன்பு தோன்றினன்.

வி - ரை:- மும்மதம் - கன்னமதம், கபோலமதம், பீசமதம். சர்வசக்திசொரூபிணியாகிய தேவியை யானையுருவத்தால் அழிக்கலாமெனக் கருதினனாகலின் மூடன் என்றார். 18

வாரணத் துரு மன்னின னரியினை வன்மைக்
காரணத் துதி யத்தத்தால் வலித்திடக் கன்னி
சீரணத்தத்தை நவிரினாற் சேதிப்பத் தேவர்ப்
பாரணத்தவன் வடவையி னுருக்கொடு படர்ந்தான்.

கு - ரை:- வாரணத்து உருமன்னினன் - யானையுருவங் கொண்ட மகிடனானவன், அரியினை - (தேவியின் வாகனமாகிய) சிங்கத்தை, வன்மை காரணம - வலிமையைப் பிரதானமாகக் கொண்டுள்ள, துதிஅத்தத்தால் - துதிக்கையினால், வலித்திட - இழுக்கவும், கன்னி - தேவியானவள், சீர அண் - சிறப்புப் பொருந்திய, அத்தத்தை - அதன் துதிக்கையை, நவிரினால் சேதிப்ப - வாளினால்வெட்டவும, தேவர் பாரணத்தவன் - தேவர்களை உபவாசமிருநதுண்பவன் (மகிடன்), வடவையின் உருகொடு - எருமையுருவங்கொண்டு, படர்ந்தான் - உலகினை அழிப்பதற்குச சென்றான்.

வி - ரை - வன்மைக்காரணம என்பதற்கு வலிய காரியங் களைச செய்வதற்குக் கருவியாயுள்ள எனப் பொருளுரைத்தலு மாம். தேவி ஒனபது வயதுக்கன்னிகையாகிய துர்க்கையுருவ முடையவளாதலின், கன்னி எனபபெற்றாள். யானையுறுபபுக் களிற் சிறந்தது துதிககையாதலின், சீரணத்தத்தை எனப் பெற்றது. 19

அனையவன போந்திட முசசக நடுங்கலு மமமை
துனைவி லுத்தம மதுவெழிற் பானமுந் தொடஙகி
நனிசி ரித்தன ணயனங்கள் சிவந்திட நாகந
தனையு றழந்திடு மகிடனுந தர்ப்பசத் துவனாய்.

கு - ரை:- அனையன் - மகிடன், போந்திட - போருக்கு வரவும், துனைவில் - விரைவாக; "கதழ்வுந்துனைவும விரைவின் பொருள" தொல்காப்பியம உரியியல் 21-சூத்திரம, நயனங் கள் - கணகள், நாகமதனைஉறழ்ந்திடும் - நாகபாம்பைப்போன்ற வீரியமுடைய, தர்பபசத்துவன - (மிகுநத) கருவகுணமுடைய வன்.

வி - ரை:- மது - தேன், திராட்சைரசமுமாம். தேவி மதுபானம் செய்தலிற் பிரியமுடையவளென்று பல நூல்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. "லளிதாசகஸ்ரநாமம "மதுப்ரீதா" 510 "மதுமதீ" மதுவோடிருப்பவள் 717. 20

காள பக்குவிற் கோடணை புரிந்துபின் கரிய
வாள பப்புறு மருப்பினாற் பிறங்கல்கள் வவ்வி
நீள பப்பதிக் கோவினாள் மேனியோ கிப்பக
கோள பற்பல வாளியாற் குமரியுங் குறைத்தாள்.

ப - ரை:- காளபம் - போரில், குவில்கோடணை - சுத்தமாகிய பேரொலியை, புரிந்து - செய்து, வாளம - வாளாயுதத்தை, பப்புஉறு - ஒத்திருக்கின்ற, மருப்பினால் - கொம்புகளினால், பிறங்கல்கள் வவவி - மலைகளைக்கிரகித்து; தூக்கி, பம்பதி - சநதிரனுடைய, கோவினாள் - கிரணத்தைத் தரித்துள்ளவளது (தேவியினது), மேனி - உடம்பில், யோகிப்ப - பிரயோகிக்கவும; எறியவும, கோள - கொலைத்தொழிலையுடைய, பற்பல - மிகப்பலவாகிய, வாளியால்-பாணங்களினால், குமரியும்- தேவியும, குறைத்தாள் - அவன் வீசிய மலைகளை உடைத்தாள்.

வி - ரை:- குவில்கோடணை; ஒருபொருட்பன்மொழி. "கோடணை வாச்சியப்பேர் கொடுமைக்குமொலிக்கும் பேரே" என்பது அரும்பொருள்விளக்கம். பப்பதிக்கோவினாள் என்பதற்கு அர்த்தசந்திரமென்னும பாணமுடையவளென்றும்,அர்த்தசந்திரனைச சிரசில் தரித்துள்ளவளென்றும பொருள் கோடலுமாம. பிரயோகிப்ப எனும வினையெச்சம முதல்குறைந்து யோகிப்ப என நின்றது. 21

போத வேமதத் தாஸ்முகஞ் சிவந்தவள் புகல்வாள்
ஆத ரத்தொடு மதுவையான் பானஞ்செய் யளவுங்
காத கன்னெனு மூடநீ கர்ச்சனஞ் செய்தி
வீத லீயுறி லென்கையாற் றேவர்மிக கார்ப்பர்.

கு - ரை:- போத - மிகுதியாக. மதத்தால் - கருவத்தினால், முகம் சிவந்தவள் - முகத்தில் உண்டான சிவப்பையுடையவளாய். ஆதரம் - விருப்பம், பானம - குடித்தல், காதகன் - கொலைகாரன், கர்ச்சனம - கருசசனை; செய்தி - செய்துகொணடிருப்பாய் "நீ எனகையால் வீதல்உறின்" எனக்கூடடுக. வீதல் - (அதன்பின்பு) இறத்தலை, ஆர்ப்பர் - மகிழ்ச்சியால் ஆரவாரிப்பர். 22

என்னக் கூறியே குதித்தவன் மேனிமே லிவர்ந்து
மின்னு பாதத்தால் வலியுற வூன்றியே விமலை
சென்னித் தாரணஞ் சூலத்தா லெற்றலுந் தீயோன்
றன்னுந் தன்முக வருததகா யம்வெளித் தோன்ற.

கு - ரை:- கூறி - சொல்லிக்கொணடு, மேனி - எருமை உடமபு, குதிதது இவர்ந்து-குதித்தேறி, விமலை - தேவியானவள், சென்னிதாரணம - (மகிடனுடைய) கழுத்தை ஊன்றி - மிதித்து. எற்றல் - அடித்தல், தீயோன்தன்னும - மகிடனது பிதுங்கிய, தன்முகம் - தனது எருமைமுகத்திலிருந்து, அருத்தகாயம் - (நிசமாகிய அசுரவுருவில்) பாதியுடமபு, வெளிதோன்ற - வெளிப்படவும்; வெளியில் தெரியவும்.

வி - ரை.- மேனி, உடம்பின்பாகமாகிய முதுகு, தலையைத் தரித்திருப்பதாதலின் கழுத்துச சென்னித்தாரணம எனப் பெயர்பெறறது. கந்தரம் என்பதுபோல. ஊன்றி என்பதற்குப் பூமியில் அழுந்துமாறு மிதித்து எனக் கூறுக வலியுற என்பதற்குத் தனது வலிமை தோன்றுமாறு எனவும், அவனுக்கு வலியுண்டாகுமாறு எனவும் பொருளுரைத்தலுமாம். தேவி மகிடன்மீது குதித்துஏறி அவனது கழுத்தைக் காலால் மிதித்துச் சூலத்தால் அவனது உடமபில் அடிக்கவும அவனது எருமை முகத்திலிருந்து நிசமாகிய அசுரவடிவம பாதி வெளிப்பட்டது என்பது கருத்து. 23

மாயூரம் தாலூகாவில்

ஓட்டர்கள் ஜாபிதா வெளியீடு

மாயூரம் தாசில்தார் தெரிவிப்பதாவது:— மதராஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி, பார்லிமெண்டு இவைகள் சம்மந்தமாக 1948ம்வருஷத்தில் எடுக்கப்பட்ட ஓட்டர்கள் ஜாபிதாக்களும், 1950மவருஷம் ஜுன் மாதத்தில் எடுக கப்பட்ட சப்ளிமெண்டரி ஓட்டர்கள் ஜாபிதாககளும, 1950ம்வருஷம் அகடோபர் மாதத்தில தயாரிககப்பட்ட மாறுதல் திருத்தல் ஜாபிதாககளுடன் சேர்த்து மாயூரம் தாலூகா (தரங்கம்பாடி சப்தாலூகா நீங்கலாக) சம்மந் தப்பட்ட ஜாபிதாககள் மாயூரம் தாலூகா ஆபீசிலும, மாயூரம் முனிசிபாலிடியிலுள்ள அநதந்தப் பிரதேசத்தி லும, குத்தாலம் மேஜர்பஞசாயத்துபோர்டு ஆபீசிலும, சம்மந்தப்பட்ட மைனர்பஞசாயதது, கிராமஙகளிலும, சப்ரிஜிஸ்த்ரார் ஆபீஸ்களிலும், போலீஸ்ஸ்டேஷன களிலும், 25—11—50 முதல் பிரசுரம் செய்யப்பட்டிருக கிறது. மேற்படி ஜாபிதாவில் சேர்கக விட்டுப்போன யோககியதாமசமுள்ள ஓட்டர்களும, ஆக்ஷேபணைசெய்ய விருப்பமுள்ளவர்களும் 23—12—50 ககுள் அந்தந்த லோகல் ஏரியாவுககு சம்மந்தப்பட்ட பிரகாரம மாயூரம் முனிசிபல் கமிஷனருககாவது, குத்தாலம் மேஜர் பஞ்சாயத்துபோர்டு நிர்வாக அதிகாரிககாவது, பிர்ககா ரெவின்யூ இனஸபெகடருககாவது, கிராம உத்தியோ கஸ்தர்களுககாவது, குறிப்பிட்ட அச்சுபாரஙகளில் தெரிவித்துககொள்ளலாம். அச்சுபாரங்கள் மேற்படி அதிகாரிகளிடம இலவசமாய்க கிடைக்கும்.

மாயூரம,
6—12—50.

(ஒப்பம) **V. தங்கசாமீ சேர்வை,**
தாசிலதார & எலக்டோரல் ரிஜிஸட்ரேஷன் ஆபீஸர்.

குத்தகை ஏல விளம்பரம்

தஞ்சாவூர் ஜில்லா மாயூரம் தாலுக்கா தருமபுரம் ஆதீனம் மடத்துககு சொந்தமான திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட கிராமங்களிலுள்ள சொத்துககளை வருகிற 1361-ம் பசலி முதல் ஐந்து பசலிகளுக்கு 1127-ம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு-ரொகக குத்தகையாக திருநெல்வேலி ஜங்ஷன் வீரராகவபுரத்தில் ஷை ஆதீன மடத்துககுச் சொந்தமான சிந்துபூந்துறை மடத்தில 1950ஞ டிசம்பர்மீ 23உ சனிக்கிழமை பகல் 3-மணிககு ஏலத்தில் குத்தகைககு விடப்படும. குத்தகை அபேக்ஷிப்பவர்கள் அன்று ஷை இடத்தில் ஆஜராகி ஏல கண்டிஷன்களுககு உட்பட்டு ரூ. 250 இனிஷியல் டிபாஸிட் கட்டி ஏலம் கேட்கலாம. மற்றும் விபரம வேண்டியவர்கள மாயூரம் தாலுககா தருமபுரம் ஆதீனம மடத்திலும், ஷை சிந்துபூந்துறையிலுள்ள தருமபுரம் மடத்திலும் கேட்டும எழுதியும தெரிந்து கொளளலாம்.

		ஏ.	செ.
தோவாளா தாலுககா	தோவாளா பகுதியில்	155	81
ஷை	தாழககுடி	6	49
ஷை	அருமநலலூர்	2	87
ஷை	தெரிசனங்கோப்பு	1	61
அகஸ்தீஸ்வரன் தாலுககா	இரவிபூதூர்	47	2
ஷை	தேரூர்	33	98
ஷை	சுசீந்திரம்	1	25

பலவிருக்ஷம் வகையரா உள்பட

தருமபுர ஆதீனம,
27-11-50.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் ஆக்ஞைப்படி,
மானேஜர்.